

கோவை ஓசூர் ரோட்டில் உள்ள கொடிசியா அலுவலகத்தில் கோவை-சிங்கப்பூர் இடையே வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் கொடிசியா தலைவர் முத்துசாமி, சிங்கப்பூர் வர்த்தக குழு தலைவர் ஜார்ஜ் ஆபிரகாம் மற்றும் குழுவினர் உள்ளனர்.

### கொடிசியாவுடன் இணைந்து

# கோவையில் சிங்கப்பூர் தொழில் கண்காட்சி

## சிங்கப்பூர் வர்த்தக குழு தலைவர் தகவல்

கோவை,அக்.31-

கோவையில் கொடிசியாவுடன் இணைந்து தொழில் கண்காட்சி நடத்த திட்டமிட்டுள்ளதாக சிங்கப்பூர் வர்த்தக குழு தலைவர் தெரிவித்துள்ளார்.

### சிங்கப்பூர் வர்த்தக குழுவினர்

சிங்கப்பூர் வர்த்தக குழுதலைவர் ஜார்ஜ் ஆபிரகாம் தலைமையில் சேண்டி ஷர்னிகான், சந்திரன் பிள்ளை, ஆல்பிரட்காலிஸ்டன், கிரேஸ் ஷாச்சாரியா, சிவனேசன், நரேந்திர அகர்வால், திர்தங்கர் பாசு, அஜய் ஜார்ஜ் உள்பட 10 பேர் கொண்ட வர்த்தக குழுவினர் கோவை வந்தனர். இவர்கள் பல்வேறு தொழில் கூட்டமைப்பினரை சந்தித்து பேசினார்கள். நேற்று கொடிசியா தலைவர்களுடன் வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் கொடிசியா தலைவர் முத்துசாமி, செயலாளர் ராமச்சந்திரன் ஆகியோர் கோவையின் வளம் குறித்தும், இங்கு பயன்படுத்தப்படும் தொழில் நுட்பங்கள், கல்வி நிறுவனங்களின் பங்களிப்பு, மேலை நாடுகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் குறித்து பேசினார்கள். இந்திய வர்த்தகத்தில் கோவையில் தயார் செய்யப்படும் பொருட்கள் மட்டும் 50 சதவீதம் ஏற்றுமதி செய்யப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர். அதே போன்று இந்தியாவுக்கும், சிங்கப்பூருக்கும் இடையே உள்ள வர்த்தக உறவுகள், கோவையில் தொழில் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றியும் எடுத்துக்கூறினர்.

### முன்னணி நிறுவனங்கள்

அடுத்து சிங்கப்பூர் வர்த்தக குழு தலைவர் ஜார்ஜ் ஆபிரகாம் பேசியதாவது:-

உலக வர்த்தகத்தில் சிங்கப்பூர் போட்டி போட்டுக்கொண்டு வளர்ந்து வருகிறது. தொழில் துறையில் ஜாம்பாவானாக இருக்கும் அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளுடன் சிங்கப்பூர் வர்த்தகம் செய்து வருகிறது. இந்தியாவுடன் கொண்டுள்ள பரஸ்பர உறவுகளால் இருநாடுளிலும் பொருளாதாரம் மேம்பட வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

குரு புஷ்யயோக தினம்

கீர்த்திலால்ஸ் தங்க நகைகள் வாங்க சிறப்பு ஏற்பாடு